Deposition of Witness

(Chapter XXV BNSS )

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.CC.No.114/2021

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.13**

| | | | |
|---|---|---|---|
| Name: | சந்திரசேகர் | Calling: | துணை காவல் கண்காணிப்பாளர் ஓய்வு |
| Father's Name/ Husband's Name: | பாலகிருஷ்ணன் | Religion: | |
| Village: | எய்தனூர் | Age: | 60 |
| Taluk: | பன்ரூட்டி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 14.05.2026 நேரம்: 12.26 PM

( 1ம் எதிரி ஆஜர் . 2 ம் எதிரி இறந்துவிட்டார், அதனால் அவருக்கு எதிரான வழக்கு அற்றுபோய்விட்டது)

அ.சா.13 முதன்மை விசாரணை.

இவ்வழக்கில் காயம்பட்ட நபர்களுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு. சிவசுப்ரமணியன் என்பருக்காகவும் சேர்த்து ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கவும் அவர் தாயரித்த ஆவணங்களை இந்த சாட்சியம் மூலம் குறியீடு செய்யவும் கற்றறிந்த எதிரியின் தரப்பு வழக்கிறஞர் எவ்வித ஆட்சேபனையும் இல்லை என தெரிவித்தார்.

நான் நில அபகரிப்பு தடுப்புபிரிவில் காவல் துணைக்கண்காணிப்பாளராக பணியாற்றி கடந்த 30.04.2026 ம் தேதி பணி ஓய்வு பெற்றேன். கடந்த 2015 ல் நகர காவல் நிலைய வட்ட ஆய்வாளராக பணியில் இருந்த போது குற்ற எண். 295/2015 சட்டப்பிரிவுகள் 147,148,452,307 இதச என்ற வழக்கில் உதவி ஆய்வாளர் திரு.லூர்து ஜெயராஜ் அவர்கள் முதல் கட்ட புலன் விசாரணையை முடித்து மேல்கட்ட புலன் விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்ததை நான் புலன் விவாரணைக்காக எடுத்துக்கொண்டு சம்பவயிடம் சென்று

பார்வையிட்டதில் ஏற்கனவே உதவி ஆய்வாளர் தயாரித்த ஆவணங்கள் போலவே இருந்ததால் நான் தனியாக பார்வை மகசரோ மாதிரி வரைப்படமோ தயார் செய்யவில்லை. அவர் விசாரித்த சாட்சிகளை நான் விசாரித்த போது அவரிடம் கூறியது போலவே என்னிடமும் கூறியதால் நான் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. மேலும் வழக்குகோப்பை பார்வையிட்டதில் சம்பவத்தில் காயம் அடைந்த ராஜேஷ் கண்ணா என்பவரை விசாரணை செய்யாமலும் வாக்குமூலம் பதியாமலும் இருந்தது தெரியவந்தது. அதனால் ராஜேஷ் கண்ணாவை நேரில் அழைத்து விசாரணை செய்ய சம்பவத்தில் 1 மற்றும் 2 எதிரிகள் மட்டுமே சம்மந்தப்பட்டதாகவும் மீதமுள்ள எதிரிகளுக்கு சம்மந்தம் இல்லை என்றும் என்னிடம் எழுத்து மூலமாக எழுதிக்கொடுத்தும், வாக்குமூலத்திலும் கூறினார். அதனால் மேலும் சாட்சிகள் நாராயணன், கோபி, சுபேர் ஆகியோர்களை மீண்டும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகள் அனைவரும் ராஜேஷ் கண்ணா கூறியது போலவே கூறியதால் வழக்கில் எதிரிகள் நீக்கல் அறிக்கை மற்றும் பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். இவ்வழக்கின் சட்டப்பிரிவுகள் 147,148,452,307 இதச என்பதை சட்டப்பிரிவுகள் 452,326,324 இதச என பிரிவு மாற்றம் செய்து இரண்டு அறிக்கைகளையும் கனம் குற்றவியல் நீதிதுறை நடுவர் அவர்களுக்கு அனுப்பிக்கொண்டேன். **எதிரிகள் நீக்கல் அறிக்கை அ.த.சா.ஆ 21 ஆகவும் பிரிவு மாறுதல் அறிக்கை அ.த.சா.ஆ 22 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. மேலும் சாட்சிகள் ரமேஷ் மற்றும் தினகரன் ஆகியோரை விசாரணை செய்ய சம்பவத்தில் 1 மற்றும் 2 எதிரிகள் மட்டுமே இருந்ததாக கூறியுள்ளார்கள். இவ்வழக்கில் காயம்பட்ட நாராயணன் மற்றும் ராஜேஷ்கண்ணா ஆகியோர்களுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு. சிவசுப்ரமணியன் உதவி மருத்துவரை விசாரித்து வாக்குமூலம் பெற்று அறிக்கை தயார் செய்தேன். அவர் நாராயணனுக்கு சொற்பகாயம் எனவும் ராஜேஷ்கண்ணாவிற்கு கொடுங்காயம் என்றும் சான்றிதழ் வழங்கினார். **நாராயணன் மற்றும் ராஜேஷ்கண்ணா இருவருக்கும் சேர்ந்த விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.த.சா.ஆ 23 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து சம்பவம் நிகழ்ந்து உண்மை என தெரியவந்ததால் எதிரிகளின் மீது சட்டப்பிரிவுகள் 452,326,324 இதச படிக்கு இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். எனது விசாரணையில் சாட்சிகள்அனைவரும் குவிமுச 161(3) இல் உள்ளதைப்போல் தான் சொன்னார்கள்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

இவ்வழக்கில் சாட்சியம் அளித்துள்ள சாட்சிகள் 2 முதல் 8 வரையிலானவர்கள் அ.சா.1 ன் உறவினர்கள் என்றால் சரிதான். இவ்வழக்கில் மூன்றாம் நபர்கள் சாட்சி பட்டியலில் இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கின் புகார்தாரர் அ.சா.1 அவரது நீதிமன்ற விசாரணையில் அவராகவே கீழே விழுந்ததால் தான் காயம் ஏற்பட்டதாக சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரியல்ல. மருத்துவரிடம் வழக்கு சொத்தை காண்பித்து கருத்து பெறவில்லை என்றால் சரியல்ல. நான் சம்பவயிடத்தை பார்வையிடவில்லை என்றாலும் சம்பவ சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றாலும் அனைத்தையும் காவல் நிலையத்திலே வைத்து தாயரித்துக்கொண்டேன் என்றாலும் சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) சந்திரசேகர்

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K
Date: 2026.05.15 14:19:10 +0530